பக்கங்கள்: 06
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 13 சனிக்கிழமை 28.11.2020 கதிர் 254

## ஏறாவூரில் 4 பேர் கைது

ஏறாவூர் பகுதியில் இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் கருத்துகளை பதிவிட்டனர் என்று கூறப்படும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகள் அமைப்பிற்கு ஆதரவாக இந்த கருத்துக்கள் பதிவிடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

2

# புலிகளை நினைவேந்திய சுமந்திரன் எப்படி எம்.பியாக இருக்க முடியும்?

## அமைச்சர் சரத் வீரசேகரா ஆவேசம்

கொழும்பு, நவம்பர் 28

"இலங்கை அரசமைப்புக்கு விசுவாசமாக செயற்படுவேன் என்று சத்தியப்பிரமாணம் செய்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., யாழ்ப்பாணத்தில் புலி ஒருவரின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கு பற்றியுள்ளார். அத்தகையவர் எப்படி நாடாளுமன்றுக்கு வரமுடியும்? இதற்கான காரணத்தை அவரிடம் சபாநாயகர் கேட்க வேண்டும்."

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் இன்று சீறினார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரா. அவர் எழுந்து பின்வருமாறு கோரினார்.

2

## இ.போ.ச. பஸ்கள் திங்கள் முதல் வழமைக்கு!


நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பஸ் போக்குவரத்துக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ்

2

மாவீரர் நினைவேந்தல் தினமன்று

## வீடுகளில் தீபம் ஏற்ற வைத்த வவுனியா மின்சார சபையினர்



மாவீரர் நாளில் வவுனியாவின் பல வீடுகளில் அச்சமின்றி தீபம் ஏற்றக் கூடிய நிலைமை மின்சார சபையின் செயற்பாட்டால் ஏற்பட்டது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாவீரர் நாளான

2

## இனவாதப் பிரசாரம் மூலம் நாட்டைத் தவறாக வழிநடத்த அமைச்சர் சரத் வீரசேகர முயற்சி!

### சுமந்திரன் சபையில் பதிலடி

கொழும்பு, நவ. 28

அமைச்சர் சரத் வீரசேகரா போன்றவர்களின் இனவாதப் பிரசாரத்தால் நாடு பிழையாக வழிநடத்தப்படும் நிலைமை உள்ளது என்று அமைச்சர் சரத் வீரசேகராவுக்கு இன்று பதிலடி தந்தார் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.

தமக்கு எதிராக அமைச்சர் சரத் வீரசேகர கிளப்பிய ஆட்சேபனைக்கு பதிலளித்த சுமந்திரன் அச்சமயம் கூறியவை வருமாறு:-

அமைச்சருக்கு இந்த விடயத்தில் பதில் தர வேண்டிய கடப்பாடு ஏதும் எனக்குக் கிடையாது. எனினும் இவ்விடயத்தில் என் பெயர்

2

## யாழில் கைதான அருட்தந்தை இன்று பிணையில் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட புனித மருத்தினார் குருபீடத்தின் முதல்வரான அருட்தந்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று மாலை 5.50 மணியளவில் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு அருகிலுள்ளபுனிதமருத்தினார்குருபீடத்துக்கு முன்பாக மாவீரர்களுக்க

2

## சங்கானை மீன்சந்தையும் மதுபானசாலையும் பூட்டு!

### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் 3 நாள்களுக்கு மூடல்

(எஸ்.நிதர்ஷன்)

சங்கானை நகரில் அமைந்துள்ள மீன்சந்தை மற்றும் மதுபானசாலை என்பன மறு அறிவித்தல் வரை வரை மூடப்பட்டுள்ளன. இதேவேளை, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் 3 நாள்கள் மூடப்பட்டுள்ளன.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் இந்த நடவடிக்கைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து

2

## வேலணையில் வீதி திருத்தப் பணியாளர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கெக்கிராவ பகுதியைச்

2

## பஸில் நாடாளுமன்றம் வரும் முன் அமெரிக்கப் பிரஜாவுரிமை இரத்து

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ, தனது அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்த பின்னரே நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிப்பார் என்று நம்பகர வட்டாரங்களில் இருந்து தகவல் கசிந்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் பஸில் ராஜபக்ஷ வருவாரா? இல்லையா? என்கின்ற சந்தேகம் வலுத்துவரும் நிலையில் அரசதரப்பிலுள்ள ஓரிரு அமைச்சர்கள் இணைந்து, ராஜபக்ஷ குடும்பத்துடன் நெருக்கமான குறிப்பிட்ட அமைச்சரிடம் இதுபற்றி வினவியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள

2

## கண்டியில் மருத்துவருக்கும் 7 தாதியருக்கும் கொரோனா

கண்டி தேசிய மருத்துவமனையில் மேலும் 8 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

தொண்டை, காது மற்றும் மூக்கு சிகிச்சைப் பிரிவின் மருத்துவர் ஒருவரும், ஏழு தாதியர்களும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனக் கண்டி மருத்துவமனை பதில் பணிப்பாளர் மருத்துவர்

2

## சங்கானையில் வயோதிபர்கள் மீது தாக்குதல்; வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில்!



சங்கானை தேவாலய வீதியில் வெளிநாட்டிலுள்ள ஒருவரின் வீட்டைப் பராமரிக்கும் வயோதிபர் ஒருவரும் வயோதிபப் பெண் ஒருவரும் இனந்தெரியாதோரால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மார்க்கண்டு வேலாயுதம் (வயது – 64), தங்கராஜா புவனேஸ்வரி (வயது – 56) ஆகிய இருவருமே தாக்குதலுக்கு இலக்காகி வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2

## யாழில் தனியார் வைத்தியசாலை உட்பட நான்கு வர்த்தக நிலையங்களுக்கு பூட்டு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகரில் திருநெல்வேலியில் தனியார் வைத்தியசாலையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் மற்றும் 4 வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பாலமுரளி அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் – கொழும்பு பயணிகள் மற்றும்

2

## புலிகளை நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை முன்வைத்து சுமந்திரன் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவினால் தமக்கு அனுப்பப்பட்ட சில அழைப்பாணைகள் தொடர்பாகவும் அவை தொடர்பில் ஆணைக்குழு சார்பில் வெளியான ஒரு செய்தி தொடர்பாகவும் அவர் சிறுப்புரிமைப் பிரச்சினையைக் கிளப்பி உரையாற்றி விட்டு அமர்ந்ததும் அமைச்சர் சரத் வீர சேகரா எழுந்தார்.

எம்.ஏ.சுமந்திரன் எவ்வாறு இங்கு சிறப்புரிமையைக் கோர முடியும்? அவர் சில தினங்களுக்கு முன்னர் பயங்கரவாதியான பண்டிதர் என்ற புலிக்கு நினைவேந்தல் செய்துள்ளார். பண்டிதர், பிரபாகரனின் சிறு வயதுக் கால நண்பர். அவரும் கிட்டுவும் மிக மோசமான கொலைகாரர்கள். பயங்கரவாதிகள். படையினரைக் கொன்றவர்கள். தங்கள் காவலில் இருந்த படையினரையே கொலை செய்தவர்கள். புலிகளின் யாழ்ப்பாணத் தளபதியை நினைவஞ்சலி செய்தவர்கள் எப்படி எம்.பி என்ற முறையில் இங்கு வர முடியும்? அதற்கான காரணங்களை அவரிடம் கேட்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் பிரிவினைவாதிகள். அவர்களை கௌரவப்படுத்துவது என்பது நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் செயல். அத்தகைய செயலைச்செய்தவர் அரசமைப்புக்கு விசுவாசமாகச் செய்த சத்தியப்பிரமாணத்தை மீறியுள்ளார். அவர் எப்படி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும்?அதற்கான விளக்கத்தை அவர் தரவேண்டும். – என்று சீறினார் அமைச்சர் சரத் வீரசேகரா.

## சங்கானை மீன் சந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரைநகருக்குத் திரும்பிய ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர் சென்று வந்த இடங்களில் தொடர்புடையவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காரைநகருக்கு வருகை தந்த அவர், 3 நாள்களுக்கு மேல் பல இடங்களுக்கு நடமாடிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு நேற்று அவரது மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மூளாய்கூட்டுறவுவைத்தியசாலைக்கு அவர் சென்றதால் வைத்தியசாலையை 3 நாள்களுக்கு மூடுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த வைத்தியசாலையின் சேவையாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நபர் சங்கானை மீன் சந்தைக்குச் சென்றதால் அதனை மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 36 வியாபாரிகள் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அவர் சைக்கிள் கடைக்குச் சென்ற நிலையில் அங்கு இருந்த 6 பேர் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர் சங்கானை மதுபானசாலைக்குச்சென்றார்என்றுகண்டறியப்பட்ட நிலையில் மதுபானசாலை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த 4 பேர் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அதில் தொற்று இல்லை என்று முடிவு கிடைத்தால் மீன்சந்தை, மதுபானசாலை என்பன திறக்க அனுமதிக்கப்படும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இனவாதப் பிரசாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகிரங்கமாக பிரஸ்தாபிக்கப்பட்டமையால் நான் பதில் தருகின்றேன்.

1985 இல் உயிரிழந்த பண்டிதர் என்பவரின் 83 வயதுத்தாயான சின்னத்துரை மகேஸ்வரி என்ற வயோதிப மாதுவுக்காக சிலதினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகினேன். அவர் ஒவ்வொரு வருடத்திலும் நவம்பர் மாதத்தில் தனது மகனுக்கு நினைவஞ்சலி செய்வது வழமை. ஆம், அவரின் மகன் விடுதலைப் புலிகளின் ஒரு தலைவர்தான். ஆனாலும் அந்த வயோதிபர்தாயைப்பொறுத்தவரை அவர் அந்தத் தாயின் மகன்தான். ஒவ்வொரு தாய்க்கும் தனது பிள்ளைகளை நினைவேந்த உரிமையுண்டு.

ஜேவிபி.அதன்தலைவரானரோஹண விஜயவீரவை, கொழும்பு வீதிகள் எங்கும் அவரின் உருவப்படங்ள், சித்திரங்ளை அலங்கரித்து நினைவு கூர்வது குறித்து, இந்த அமைச்சர் ஒரு கேள்வி தன்னும் எழுப்பியவர் அல்லர்.

அதனால்தான் உயிரிழந்தவர்களை நினைவேந்துவதில் கூட இந்த நாட்டில் தமிழர்கள் பாகுபாடு காட்டப்படுகின்றார்கள், ஒதுக்கப்படுகின்றார்கள் என்று நான் இந்தச் சபையில் கூறினேன்.

அத்தகைய கீழ்த் தர நடத்தையைக் கொண்ட இந்த அமைச்சர்தான், அந்தத் தாய் தனது மகனை நினைவேந்தல் செய்தபோது நான் அவருடன் கூடவே நின்றமையை இங்கு கேள்விக்கு உட்படுத்துகின்றார்.

அந்தத் தாய் தனிப்பட்ட முறையில் தனது மகனுக்கு நினைவேந்தல் செய்யும் முழு உரிமையும் உண்டு என்று முதல் நாள்தான் மேல்நீதிமன்றம் தனது உத்தரவில் விசேடமாகக் குறிப்பிட்டிருந்தது.

அந்த நினைவேந்தலைத்தான் அத் தாய் தனது வீட்டில் – அது வீடு என்றும் கூறமுடியாது ஒரு கொட்டில் அவ்வளவுதான் – அதில் மேற்கொண்டார். நான் அவருடன் கூட இருந்தேன்.

இந்த நினைவேந்தல் நிகழ்வு பொது இடங்களில்செய்யப்பட முடியாது. தனித்து வீட்டில் செய்யலாம் என்பதை அந்தத் தாய்க்கு விளங்கப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட நீதிபதி என்னிடம் விசேடமாக கோரியிருந்தார். அந்த நிகழ்விலேயே நான் பங்குபற்றினேன். அது தனிப்பட்ட நிகழ்வு. அந்த நிகழ்வுப் படங்களைப் பாருங்கள். அவரின் மகன் சீருடையில் கூட இருக்கவில்லை. இது ஒரு மகனுக்காகதாய்ஆற்றியநினைவேந்தல்நிகழ்வு. அவருக்காக நான் முதல் நாள் மன்றில் முன்னிலையாகியிருந்தேன். அந்த நிகழ்வை தனிப்பட்ட முறையில் வீட்டில் அவர் நடத்தலாம் என்பதை அவருக்கு விளங்கப்படுத்துமாறு நீதிமன்றமே என்னை விசேடமாகக் கோரியிருந்தது.

இதனை சர்ச்சைக்குரிய விடயமாக நிலையில்கட்டளையின்கீழ் இங்கு எழுப்ப முடியாது. என்றாலும் கீழ்தரனமான முறையில் அமைச்சர் அதனை முன்னெடுப்பது முற்றிலும் தவறு. – என்றார் சுமந்திரன்.

## பஸில் நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்ட அமைச்சர், பஸில் ராஜபக்ஷ இப்போதைக்கு நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிக்க மாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிவிட்டு இலங்கைப் பிரஜாவுரிமையுடனேயே அவர் நாடாளுமன்றம் பிரவேசிப்பார் என்றும் அவர் கூறியுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

## ஏறாவூரில் 4 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏறாவூர் பொலிஸாரினால் இந்தச்நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## வேலணையில் வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 24 வயதுடைய நபருக்கே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 200 பேரிடம் எழுமாறாக எடுக்கப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதில் வேலணை புளியங்கூடல் வீதித் திருத்தப்பணிக்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களும் அடங்கியிருந்தனர்.

இந்தநிலையில் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து புளியங்கூடல் பகுதியில் 2 வர்த்தக நிலையங்கள் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலில் இன்று காலை மூடப்பட்டுள்ளன. அத்துடன், 10 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. சுகாதாரப் பிரிவினர் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர் – என்றார்.

## வீடுகளில் தீபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று பொது இடங்களில் ஒன்றுகூடித் தீபமேற்ற பொலிஸார், நீதிமன்றம் ஊடாக தடை உத்தரவைப் பெற்றிருந்தனர். அத்துடன் இராணுவத்தினரதும், பொலிஸாரதும் தீவிர கண்காணிப்புக்கள் காணப்பட்டன.

இந்தநிலையில் நேற்று மாலை 5 மணி தொடக்கம் இரவு 8.30 வரையான காலப்பகுதியில் வவுனியாவின் பல பகுதிகளிலும் மின்சாரத் துண்டிப்பு காணப்பட்டது. இதன் காரணமாக மக்கள், மாவீரர் நினைவேந்தலை முன்னிட்டு ஏற்றிய தீபம் மற்றும் மெழுகுவர்த்தி ஒளியில் தமதுசெயற்பாடுகளைமுன்னெடுத்தனர்.

அத்துடன், உணர்வுபூர்வமாக மக்கள் வீடுகளில் அஞ்சலி செலுத்திய அதே வேளை, மின் துண்டிப்பால் பலரும் அச்சமின்றி தீபம் ஏற்றினர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் முன்னறிவித்தலின்றி அடிக்கடி மின்சாரம் தடைப்படுகின்றது என விசனம் தெரிவித்துள்ள மக்கள், மாவீரர் நாளில் மின்சாரம் தடைப்பட்டமை தமக்கு அச்சமின்றி தீபம் ஏற்றக் கூடிய நிலையை ஏற்படுத்தியது எனவும் தெரிவித்துள்ளனர். (100)

## யாழில் கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலி செலுத்துவதற்குத் தயாராகிய வேளை அவர் கைது செய்யப்பட்டார்.

இளவாலையைச்சேர்ந்தவரும் புனித மருத்தினார் குருபீடத்தின் முதல்வருமான அருட்தந்தை பாஸ்கரனே யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி பொதுவெளியில் நினைவேந்தலை நடத்த முயன்றமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளை முன்வைத்து இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட்டார்.

அருட்தந்தை சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் முன்னிலையாகினார்.

சந்தேக நபர் சார்பில் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து அவர் சமர்ப்பணம் செய்தார்.

பிணைக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்த பொலிஸார், சந்தேகநபருக்கு வெளிநாடுகளிலிருந்து நிதிப் பங்களிப்பு கிடைப்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மன்றுரைத்தனர்.

எனினும், அருட்தந்தையை ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவிக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

## கண்டியில் மருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈரோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி, கண்டி தேசிய மருத்துவமனையில் 18 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த மாதம் 26 ஆம் திகதி கண்டி மருத்துவமனையின் ஊழியர்களுக்கு நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையின் போது தொண்டை, காது மற்றும் மூக்கு சிகிச்சை பிரிவின் இரண்டு தாதியர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் அந்தப் பிரிவில் பணியாற்றியவர்கள் அனைவரும் இன்று பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து, கண்டி தேசிய மருத்துவமனையின் தொண்டை, காது மற்றும் மூக்கு சிகிச்சைப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

## இ.போ.ச பஸ்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பற்றாக்குறை காரண மாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணிக்கும் போது கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் பயணிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருள்கள் சேவையில் ஈடுபடும் அதிசொகுசு பஸ் மற்றும் பாரவூர்தி வாடிக்கையாளர் நிலையமும் புடவையகம் ஒன்றும் நாவாந்துறையில் ஒரு வியாபார நிலையமும் இவ்வாறு உடனடியாக மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காரைநகர் வந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் சென்று வந்த இடங்கள் சுகாதாரத்துறையினரால் இனங்காணப்பட்டு தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியே யாழ்ப்பாணம் மாநகர சபை பிரிவில் தனியார் வைத்தியசாலையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் 4 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

தனியார் வைத்தியசாலையின் பணியாளர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் ஊழியர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் கிடைத்தபின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

## சங்கானையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாட்டில் வசிப்பவரின் வீட்டைப் பராமரிக்கும் பணியில் இருவரும் அங்கு தங்கியிருந்தனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் மீது தாக்குதல் நடத்திய வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அவர்கள் தாக்கப்பட்டமைக்கான சரியான காரணம் கண்டறியப்படவில்லை என்றும், கொள்ளையிட்டமை தொடர்பிலும் தகவல்கள் இல்லை என்றும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இனி இறுகும் நெருக்குவாரம்

இந்த இலங்கைத் தீவு பௌத்த, சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியது என்ற பேரினவாதத் திமிரில், மேலாண்மை மமதையில் இலங்கை அரசு செயற்படும் வரைக்கும், அது சர்வதேசத் தரப்புகளினால் பந்தாடப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த உண்மையை நாடாளுமன்றில் அரசுக்கு விவரமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

இலங்கையில் தமிழர் மற்றும் முஸ்லிம்களின் தனித்துவ உரிமைகளையும் உரித்துக்களையும் கூட ஏற்று அங்கீகரித்து மதிப்பதற்கு தென்னிலங்கை அரசு தவறும் வரை இந்த நிலைமையே நீடிக்கும் என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

இந்த நிலைமை நீடிப்பது மட்டுமல்ல, இதையும் தாண்டி மிக மோசமான நெருக்குவாரத்தை இலங்கை எதிர்கொள்ள நேரும் என்பதுதான் கள யதார்த்தமாக உள்ளது.

சிறுபான்மை இனமான தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளைப் பகிர்ந்தளிக்க மறுக்கும் கொழும்பு அரசு, அவர்களை அடக்கி, அடிமைப்படுத்தி ஆளவே நினைக்கிறது.

இந்தத் தீவு தமிழர்களினதும் தாயக பூமி என்பதை ஏற்க மறுத்து, தமிழர்களை மூன்றாந்தரப் பிரஜைகளாக நடத்த முற்பட்டதன் விளைவாக முப்பது ஆண்டு காலம் மிக மோசமான – மிகக் கொடூரமான – பாரிய இழப்புக்களைத் தருகின்ற – ஒரு யுத்தத்தையே நாடும் அரசும் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

அந்த யுத்தத்தின் பேரதிர்வுகளை – மிக மோசமான பொருளாதாரப் பாதிப்புக்களை – கடன் நெருக்கடிகளை – இன்னமும் நாடு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

இன்னும் இரண்டு தசாப்தங்கள் சென்றாலும் கூட இந்த யுத்தத்தின் தொடர் விளைவுகளிலும், பாதிப்புக்களிலும் இருந்து நாடு மீளுவது துர்லபமே.

அப்படி இருக்கையில் இனங்களுக்கு இடையில் குரோதங்களை, முரண்பாடுகளை, விரோதங்களை தொடர்ந்து நீடிக்க வைக்கும் பகீரதப் பிரயத்தனத்தை இலங்கை ஆளும் தரப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமை மோசமான விளைவுகளையே நாட்டுக்கு ஏற்படுத்தும் என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார் கஜேந்திரகுமார்.

ஆனால், இந்த உண்மை விளக்க உபதேசம் பேரினவாதப் பேயுருக் கொண்டு, மேலாண்மைத் திமிரில் வெறிப்பிடித்து நிற்கும், சிங்களத்தின் காதுகளில் விழப் போவதில்லை. அவை செவிடன் காதில் ஊதிய சங்கின் நிலைமைதான். புறக்குடத்துக்கு வார்த்த நீரின் நிலைவரம்தான்.

சர்வதேசத்தினால் பந்தாடப்படும் மிகமோசமான நிலையில் இருக்கின்றோம் என்ற யதார்த்தம் மிக விரைவில் கொழும்புக்கு உறைப்பாக உணர்த்தப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகின்றது.

வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரை இலங்கை எதிர்கொள்ளும் போது, கோட்டாபய ராஜபக்ஷ அரசுக்கு தற்போதைய சர்வதேச இராஜதந்திர உறவாடல் போக்கின் ஆழ, அகலங்கள் மற்றும் அர்த்த பரிமாணங்கள் புரியத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே இந்த விடயத்தில் தனது நிலைப்பாடு கடுமையாக இருக்கும் என்பதை இங்கிலாந்து சுட்டிக்காட்டி விட்டது.

ஜெனீவாவில் இதற்கு முன்னர் இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து முன்னெடுத்த தீர்மானங்களில் கூறப்பட்டவற்றை நடைமுறைப்படுத்தச் செய்வதற்கான செயற்பாடுகளை இங்கிலாந்து ஏற்கனவே ஆரம்பித்து விட்டது என்றும் –

இதற்கான, முறையான பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றுவதற்கான முன்னாயத்தங்கள் செய்யப்படுகின்றன என்றும் – பிரிட்டன் தரப்பினால் கோடி காட்டப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் தொடர்பான அமெரிக்காவின் பார்வையும் நோக்கும் கூட பெரிய மாற்றத்துக்கு உள்ளாவது உறுதி என சர்வதேச ஊடாட்டங்களில் பரிச்சயம் மிக்க நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கை விடயத்தில் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியாயங்களுக்கு அமைவான நீதி விசாரணை அவசியம், அதையொட்டி உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை அம்பலப்படுத்தப்பட வேண்டும், இக்குற்றங்களை இழைத்தோர் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் சட்டரீதியான எதிர்பார்ப்பும் நிலைப்பாடும் ஆகும்.

இந்த நிலைப்பாடு வரும் மார்ச்சில் ஜெனீவாவில் உறைப்பாகக் கொழும்புக்கு உணர்த்தப்படும் போது கஜேந்திரகுமார் இப்போது கூறிய ஆலோசனையின் விளக்கம் இலங்கையின் அதிகார வர்க்கத்துக்குப் புரிய ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கலாம்.

# நாளை கார்த்திகைத் தீபம் அதைத் தடுத்து விடாதீர்கள்!

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

தவறாகப் புரிந்து கொண்டு கார்த்திகை தீபத்தையும் தடுத்து விடாதீர்கள் என்று யாழ்ப்பாணம், இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான.ரீ.சி.சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நாளை ஞாயிற்றுக் கிழமை இந்துக்கள் பாரம்பரியமாக அனுஷ்டித்துவரும் திருக்கார்த்திகை தினம் அமைவதால் அன்றைய தினம் ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றி வழிபடுவது வழமையாக உள்ளது இதன் மூலம் தீய விஷக் கிருமிகள் அழிவடையும் என்பதும் இந்துக்கள் நம்பிக்கை.

தற்போது மாவீரர் தினத்தை அடுத்து இத் தீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளதால் பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் இதைத் தவறாகப் புரிந்து இதனை தடுக்க முற்படலாமென பலர் அஞ்சுகின்றனர் என எம்மிடம் தெரிவித்துள்ளனர். ஆதலால் இந்துக்களின் பாரம்பரியமான இத்தினம் பண்டு தொட்டு நடை பெற்று வருகின்றமையை இந்நேரத்தில் தெரிவுபடுத்த வேண்டியுள்ளது. உலகில் உள்ள இந்துக்கள் அனுஷ்டிக்கும் இந்நிகழ்வின் மகோன்னதமான புனிதத் தன்மையை புரிந்து கொள்வது அவசியமாகும். மேலும் எமது அயல் நாடான இந்தியாவில் இந்நிகழ்வு வெகுவிமர்சையாக நடை பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவெண்ணாமலை இதற்கு பிரசித்தி பெற்றது. இந்நிகழ்வு உலகில் உள்ள அனைத்து ஆலயங்களில் நடைபெறினும் முருகப்பெருமான் எழுந்தருளி உள்ள ஆலயங்களில் சிறப்புற நடைபெறுவதை இந்நேரத்தில் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை விஷ்ணு ஆலயங்களில் இத்தீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற உள்ளமையையும் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்வது அவசியமானதாகிறது.

தற்போதுள்ள கொரோனா சூழலில் சுகாதார நடைமுறைகளைப் பேணி அனுஷ்டிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். - என்று தெரிவித்தார்.

# கிளிநொச்சிக் கல்வி வலயப் பிரிப்பிலும் அரசியல் புகுந்து விளையாடுகின்றதா?

## பகிரங்கமாக குற்றம் சாட்டுகின்றது மாவட்டப் பிரஜைகள் குழு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.28

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்கும் நடவடிக்கையிலும் அரசியல் புகுந்து விளையாடுவதாக கிராம மட்ட அமைப்புக்கள் பகிரங்கக் குற்றச்சாட்டை முன் வைக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் ஒரேயொரு கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான எல்லை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஒரு விசேட கலந்துரையாடலில் தீர்மானம் எட்டப்பட்டது

கிளிநொச்சி மாவட்டம் முழுமையாக தற்போது ஒரேயொரு கல்வி வலயத்தின் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்படுவதனால் பாரிய நிதி நெருக்கடி, நிர்வாக நெருக்கடிகளுடன், வளப் பங்கீடுகள் தொடர்பிலும் நெருக்கடி நிலைமை இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதிக அரசியல் தலையீடு, சில பக்கச் சார்பு நடவடிக்கைகள், தகுதியற்ற நியமனங்கள் போன்ற பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் கிளிநொச்சி வலய நிர்வாகத்தை குறைந்தது இரண்டாகப் பிரிக்க வேண்டும் என கடந்த 10 ஆண்டுகளாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

வலயத்தை இரண்டாகப் பிரிப்பதானால் எதன் அடிப்படையில், அதன் எல்லைகள் என்ன என்பவற்றோடு அலுவலக அமைவிடம் எனப் பல விடயங்கள் தொடர்பில் கடந்த 23ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடந்த விசேட கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடல் மாவட்டச் செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. இதில் மாகாண, வலய, கோட்ட அதிகாரிகளுடன் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதுள்ள நான்கு கோட்டங்களான கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிளைப் பள்ளி ஆகியவற்றில் கரைச்சிக் கோட்டத்தை தனியாகவும், ஏனைய 3 கோட்டங்களையும் உள்ளடக்கி பரந்தனில் இரண்டாவது வலயத்தையும் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

"வலயத்தை இரண்டாகப் பிரிப்பதில் எமக்கும் மகிழ்ச்சியே. இருப்பினும் ஓர் அரசியல் கட்சியின் சார்பானவர்களையும் அவர்தம் பரிபாரங்களையும் கலந்துரையாடலிற்கு அழைத்த மாவட்டச் செயலாளர், எம்மை வேண்டுமென்றே புறக்கணித்தார்" - என மாவட்டப் பிரஜைகள் குழு பகிரங்கமாக குற்றம் சாட்டுகின்றது.

10 வருடமாக மாவட்டச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண ஆளுநர் எனப் பல தடவைகள் இது தொடர்பில் சந்திப்புக்களை மேற்கொண்டோம். அவை தெரிந்தும் வேறு சில அமைப்புக்களை அழைப்பது தொடர்பில் நாம் கல்வி அமைச்சின் செயலாளரை தொடர்பு கொண்டு வினாவியபோது, இது மாவட்டத்தின் பொது விடயம், எவரும் கூட்டத்தில் பங்கு கொள்ள முடியும் எனப் பதிலளித்தார். அதன் அடிப்படையில் நாம் கூட்டத்திற்கு சென்றபோது அங்கே வேறு சில பொது அமைப்புக்கள் பங்குகொண்டிருந்த போதும் நாம் தடுக்கப்பட்டோம். இதனால் மாவட்டச் செயலாளரை அணுகி, கல்வி அமைச்சின் செயலாளர் அனுமதிக்கும் போது நீங்கள் ஏன் தடுக்கின்றீர்கள் என கேட்டோம்.

அதன் அடிப்படையில் கூட்டத்தில் பார்வையாளராக மட்டுமே கலந்துகொள்ள முடியும், பேச முடியாது என மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். இதனை நாம் மீண்டும் கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். அப்போது அவரின் தலையீட்டினால் எமக்கு ஓரளவு வாய்ப்புக் கிட்டியது. இந்த மாவட்டத்தில் பணி செய்யும் எம்மை ஓர் அரசியல் கட்சியின் நலனிற்காக மாவட்டச் செயலாளர் நசுக்குகின்றார் என்றே நாம் கருதுகின்றோம் என அதன் தலைவர் ஜீவநாயகம் தெரிவித்தார்.

# மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக பேராசிரியர் வஜிர திஸாநாயக்க நியமனம்!



இலங்கை மருத்துவ சபையின் புதிய தலைவராக பேராசிரியர் வஜிர திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி ஆவார்.

முன்னாள் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா, மருத்துவ சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் புதிய தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் இந்திய வீரர்கள் மூவர் உயிரிழப்பு!



எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய வீரர்கள் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) ரஜோரி அருகே எல்லையை பாதுகாக்கும் பணியில், இந்திய வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, எந்தவோர் அறிவிப்பும் இன்றி பாகிஸ்தான் இராணுவத்தினர் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர்கள் மூவர் உயிரிழந்தமையுடன் இரண்டு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்துக்குப் பதிலடி கொடுத்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தீவிரவாதிகளை எல்லை தாண்டி ஊடுருவச் செய்ய பாகிஸ்தான் இராணுவத்தினர் இதுபோன்ற தாக்குதல்களை நடத்துகின்றமை வழக்கம் எனவும் இந்திய இராணுவத்தினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கர்நாடக முதல்வரின் அரசியல் செயலர் தற்கொலைக்கு முயற்சி!



அதிக அளவில் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டு எடியூரப்பாவின் அரசியல் செயலாளர் என்.ஆர்.சந்தோஷ் தற்கொலை செய்து கொள்ள முயன்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பாவின் அரசியல் செயலாளராக இருந்தவர் என்.ஆர்.சந்தோஷ். பெங்களூர் டாலர்ஸ் காலனியில் இவர் தன் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். கடந்த மே மாதத்தில் முதல் அமைச்சர் எடியூரப்பாவின் அரசியல் செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்போதிருந்து , எடியூரப்பாவின் நம்பிக்கை பெற்றவராக கர்நாடக அரசியலில் வலம் வந்தார்.

இந்தநிலையில், நேற்று இரவு 7 மணியளவில் என்.ஆர்.சந்தோஷ் தன் வீட்டிலுள்ள அறையில் மயங்கி கிடந்தார். சந்தோஷின் குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக பெங்களூரில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். வைத்தியசாலையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், என்.ஆர்.சந்தோஷ் அதிக அளவில் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றமை தெரியவந்தது. ஆனால் அவர் எதற்காக தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்பது தெரியவில்லை.

கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா வைத்தியசாலைக்கு நேரில் சென்று என்.ஆர்.சந்தோசின் உடல்நிலை தொடர்பில் கேட்டறிந்தார்.


எடியூரப்பாவின் நெருங்கிய உறவினர்தான் இந்த சந்தோஷ். இது தொடர்பாக எடியூரப்பா கூறுகையில் -

நேற்று காலை கூட அவருடன் சேர்ந்து நடை பயிற்சி மேற்கொண்டேன். என்ன காரணத்துக்காக தற்கொலைக்கு முயன்றார் என்பது தெரியவில்லை. விரைவில் குணமடைவார் என்று நம்புகிறேன். - என்று தெரிவித்துள்ளார்.

சந்தோஷின் மனைவி பல்லவி கூறுகையில் -

தன் கணவருக்கு அரசியல் ரீதியாக அழுத்தம் இருந்தது. இதன் காரணமாக, தன்னுடைய இடத்தை இழந்து விடும் அச்சத்தில் இருந்தார். - என்கிறார்.

# பொரிஸ் ஜோன்சனுடன் பிரதமர் மோடி பேச்சு!



இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சனுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி ஊடாக பேச்சில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இந்தியா, இங்கிலாந்து நட்பை அடுத்த பத்தாண்டுகளுக்கு எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்வது என்பது தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கொரோனாவுக்கு எதிராகவும் சூழல் தொடர்பான போராட்டத்திலும் இணைந்து செயற்பட இரு தலைவர்களும் உறுதி எடுத்துக் கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் பொரிஸ் ஜோன்சனுடன் இணக்கமான முறையில் உரையாடல் நிகழ்த்தப்பட்டதாக பிரதமர் மோடி தனது ருவிட்டர் பதிவில் பதிவேற்றியுள்ளார்.

# இந்திய - சீன 9 ஆவது சுற்று பேச்சு திகதியை உறுதிப்படுத்தாத சீனா!



கிழக்கு லடாக் எல்லையில் ஏற்பட்டுள்ள மோதல் போக்கை முடிவுக்கு கொண்டுவர, 9ஆம் சுற்று பேச்சுக்கான திகதியை சீனா உறுதிப்படுத்தாமல் உள்ளது.

8 ஆம் சுற்று பேச்சின் போது படை வீரர்கள், டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகளை விலக்கிக் கொள்ள பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும், அதை எப்படி செயல்படுத்துவது என்பதில் முரண்பாடு நீடிக்கிறது.

பாங்காங்சோ தென்கரை - சூசுல் பகுதியில் மலைத்தொடர்களில் சிகரங்களை கைப்பற்றி, சாதகமான நிலையில் இந்திய இராணுவ நிலைகள் உள்ளன. எனவே, அங்கிருந்து படைகளை விலக்கிக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும் என சீனா பிடிவாதமாக உள்ளது. அதேசமயம், பாங்காக்சோ ஏரியின் வடகரையில், ஃபிங்கர் ஏரியாவில் 8 கிலோமீற்றர் தொலை வுக்கு சீனாவின் ஆக்கிரமிப்பு உள்ளது. அங்கிருந்து படை விலக்கம் தொடங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

# மாவீரர் நாள் தமிழகத்தின் பல பகுதிகளில் மெழுகுவர்த்தி ஏற்றி கண்ணீரால் அஞ்சலி!



இராமேஸ்வரம், நவ. 28

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் தமிழகத்திலும் பல பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சியினரின் ஏற்பாட்டிலேயே தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில், இந்தத மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இதற்கமைய, இராமநாதபுரம் மாவட்டம் - இராமேஸ்வரத்திலுள்ள அக்னி தீர்த்த கடற்கரையில், இறுதி கட்ட யுத்தத்தில் உயிர் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இரவு சுமார் 7 மணி அளவில் பாடல் இசைக்கப்பட்டு, கண்ணீர் மல்க மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீரால் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இராமநாதபுரம், திருப்புல்லாணி, திருவாடனை, முதுகுளத்தூர், கடலாடி, ஆர்.எஸ்மங்கலம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நாம் தமிழர் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்குப் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர் எனவும் இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## கல்யாணமாலை

வட சர்வதேச
திருமண சேவை





| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1993.12.31 | பிறந்த திகதி - 1990.12.19 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூசம் | நட்சத்திரம் -உத்தரம் 1 |
| சூ/ செவ் - 12இல் | பாவம் - 36 3/4 |
| பாவம் - 31 1/4 | செவ் - 12இல் |
| கல்வி - பொறியியல் | கல்வி - CIMA பட்டதாரி |
| தொழில் - பொறியியலாளர் | தொழில் - வங்கி உத்தியோகம் |
| எதிர்பார்ப்பு - பொறியியல் OR டாக்டர் | எதிர்பார்ப்பு - பட்டதாரி உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# எதியோப்பியாவில் இறுதிகட்ட போர் நடவடிக்கைக்கு பிரதமர் உத்தரவு!

கிழக்கு ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவில், அரசாங்கத்துக்கும் தன்னாட்சி பெற்ற டைக்ரே மாகாணத்துக்கும் இடையே நீண்டுவரும் மோதல் மீண்டும் வலுப்பெறவுள்ளது.

டைக்ரே மாகாண கிளர்ச்சியாளர்கள் தங்கள் ஆயுதங்களை விட்டு அமைதியான முறையில் சரணடைய 72 மணி நேர காலக்கெடு விதித்த காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில், மத்திய இராணுவம் தங்கள் இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதியோப்பிய பிரதமர் அபே அகமது தெரிவித்துள்ளார்.

இந்த உள்நாட்டு சண்டையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என எதிர்வுகூறப்படுகின்ற போதிலும், டைக்ரே மாகாணம் முழுவதும் தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளதமையால் உயிரிழப்புகள் தொடர்பான முழுமையான தகவல்கள் வெளிவரவில்லை.

அத்துடன் இந்த உள்நாட்டு சண்டையால் அச்சமடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் அண்டை நாடான சூடானுக்கு அகதிகளாக சென்ற வண்ணம் உள்ளனர்.

இதனிடையே டைக்ரே கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான சண்டையில் எதியோப்பிய அரசாங்கம், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவும், அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றம்சாட்டி வருகிறது.

எதியோப்பியாவில் டைக்ரேயன்ஸ் எனப்படும் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் வசித்து வரும் டைக்ரே மாகாணத்தை, டைக்ரே மக்கள் விடுதலை முன்னனி கட்சியினர் ஆட்சி செய்து வருகின்றனர். இந்த பிரிவினர் 2018ஆம் ஆண்டுவரை எதியோப்பிய அரசாங்கத்தில் முக்கிய அங்கம் வகித்து வந்தனர்.

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற அபே அகமது பிரதமராக பதவியேற்றது முதல் மத்திய அரசாங்கத்துக்கும் டைக்ரே மாகாணத்தில் உள்ளவர்களுக்கும் இடையே மோதல்கள் நிலவி வந்தன.

டைக்ரே மாகாணத்தை எதியோப்பாவில் இருந்து பிரித்து தனி நாடாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு டைக்ரே கிளர்ச்சியாளர்கள் குழுவும், டைக்ரே மக்கள் விடுதலை முன்னனி கட்சியும் செயற்பட்டு வருகின்றன.

இந்த மோதலின் உச்சமாக கடந்த நவம்பர் மாதம், டைக்ரே மாகாணத்தில் இருந்த டைக்ரேயன்ஸ் சமூகத்தின் இராணுவ பிரிவினர் எதியோப்பியாவின் மத்திய அரசுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர்.

இதனால் டைக்ரே மாகாணம் எதியோப்பிய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து பிரிந்தது. தற்போது இரு தரப்புக்கும் இடையே கடுமையான மோதல் நிலவிவருகின்றது.

# நியூஸிலாந்தில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது மாவீரர்களின் நாள்!



நியூஸிலாந்து மாவீரர் பணிமனையால் ஒக்லாந்து நகரத்தில் உணர்வு பூர்வமாக 2020 ஆம் ஆண்டு மாவீரர் நாள் நினைவுகூரப்பட்டது.

அந்நாட்டு நேரப்படி, மாலை 7.05 மணிக்கு பொதுச்சுடரை வைத்திய கலாநிதி வசந்தன் ஏற்றி வைத்தமையைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து, ஈகைச்சுடரை கப்டன் பேரின்பநாதனின் அக்கா ஏற்றி வைத்தமையுடன் தொடர்ந்து மாவீரர் பாடலுடன் மாவீரர்களின் படத்துக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, கலைநிகழ்வுகள் மற்றும் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

மேலும், சிறப்பு அழைப்பாளராக நியூஸிலாந்து அகதிகள் மற்றும் கலாசார அமைப்புகளின் இயக்குநர் அகிலிலு சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில், தான் எரித்திரிய நாட்டைச் சேர்ந்தவரென்றும் இதனால் ஈழத் தமிழர்களினதும் விடுதலைப் போராட்டத்தினதும் உணர்வுகளைத் தங்களால் உணரமுடியுமெனவும் கூறியுள்ளார்.

# ஈரானிய உயர்மட்ட அணுசக்தி விஞ்ஞானி கொல்லப்பட்டார்!



ஈரானிய உயர்மட்ட அணுசக்தி விஞ்ஞானி மொஹ்சென் ஃபக்ரிசாதே கொல்லப்பட்டுள்ளார் என ஈரான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு தெஹ்ரானின் புறநகர்ப் பகுதியான அப்சார்ட்டில் அவரது வாகனத்தில் வைத்து அவர் இன்று பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரிகள் ஃபக்ரிசாதேவின் மரணத்தை உறுதிப்படுத்தியுள்ளதுடன் தாக்குதல் நடத்தியவர்கள் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஈரானிய விஞ்ஞானி பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு அமைப்பின் தலைவராகத் தற்போது பணியாற்றியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு செய்தியாளர் மாநாடொன்றில் குறித்த ஈரான் விஞ்ஞானியின் பெயரை நினைவில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

அத்துடன், கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஈரானிய அணு விஞ்ஞானிகளைக் குறிவைத்து தொடர்ச்சியான கொலைகளை இஸ்ரேல் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்தக் கொலை தொடர்பாக இஸ்ரேல் மீது சந்தேகம் எழுந்துள்ளதுடன் விஞ்ஞானியின் கொலை பற்றிக் கருத்துக்கூற இஸ்ரேல் மறுத்துள்ளது.

# துருக்கி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான சிறை!




நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தோல்வியுற்ற ஆட்சி கவிழ்ப்பு முயற்சியில் ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகனை தூக்கியெறிய சதித்திட்டம் தீட்டிய இராணுவ தளபதிகள், விமானப்படை தலைவர்கள் மற்றும் விமானிகள் உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகளுக்கு துருக்கி நீதிமன்றம் கடுமையான சிறைத்தண்டனை விதித்துள்ளது.

தலைநகர் அங்காராவுக்கு அருகிலுள்ள ஒரு விமான நிலையத்திலிருந்து 2016ஆம் ஆண்டு ஜுலை 15ஆம் திகதி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியை மேற்கொண்டதாக கிட்டத்தட்ட 500 பிரதிவாதிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட இவர்கள் மீதான வழக்கில் கடந்த (வியாழக்கிழமை) இறுதி விசாரணை நடந்தது.

இதில் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து 337 முன்னாள் விமானிகள் மற்றும் பிற சந்தேக நபர்களுக்கு துருக்கி நீதிமன்றம் கடுமையான சிறைத்தண்டனை விதித்தது.

ஆட்சி கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களைக் குறிவைத்து டசின் கணக்கான வழக்குகள் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள போதிலும், இந்த வழக்கு மிக உயர்ந்ததாகக் காணப்படுகின்றது. மொத்தம் 475 பிரதிவாதிகள் விசாரணையில் இருந்தனர். அவர்களில் 365 பேர் காவலில் உள்ளனர். வழங்கப்பட்ட 337 ஆயுள் தண்டனைகளில், 291 மோசமான ஆயுள் தண்டனைகள் அடங்கும்.

இது துருக்கிய நீதிமன்றங்களில் மிகக் கடுமையான தண்டனையை உள்ளடக்கியது. அதாவது பிணைக்கு வாய்ப்பு இல்லை என்று அரசு செய்தி நிறுவனம் அனடோலு தெரிவித்துள்ளது.

செய்தி நிறுவனமான அனடோலு மற்றும் பிற செய்தி நிறுவனங்கள், குறைந்தது 25 எஃப் - 16 விமானிகளுக்கு மோசமான ஆயுள் தண்டனை வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் விமானப்படை தளபதி அகின் ஓஸ்டுர்க் மற்றும் அங்காராவுக்கு அருகிலுள்ள அகின்சி விமான நிலையத்தில் உள்ள மற்றவர்கள் மீது, சதித்திட்டத்தை வழிநடத்தியது மற்றும் நாடாளுமன்றம் உள்ளிட்ட அரசாங்க கட்டடங்களுக்கு குண்டுவீசி, எர்டோகனைக் கொல்ல முயற்சித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

துருக்கியின் அப்போதைய இராணுவத் தலைவரும் இப்போது பாதுகாப்பு அமைச்சருமான ஹுலுசி அகர் மற்றும் பிற தளபதிகள் ஆட்சி கவிழ்ப்பு நடந்த இரவில் பல மணி நேரம் சிறைபிடிக்கப்பட்டனர்.

குலனின் நெட்வொர்க்குடனான உறவுகள் தொடர்பாக 'சிவிலியன் இமாம்கள்' என்று அழைக்கப்படும் நான்கு தலைவர்களுக்கு, ஜனாதிபதியை படுகொலை செய்ய முயன்றமை, கொலை செய்தமை மற்றும் அரசமைப்பு ஒழுங்கை அகற்ற முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு 79 மோசமான ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. எழுபது பேர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு துருக்கி இராணுவத்தின் ஒரு பிரிவு, எர்டோகனின் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சித்தது. ஆனால் மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதி எர்டோகன் அந்த புரட்சியை முறியடித்தார். எனினும், இதில் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் வசித்து வரும் துருக்கியை சேர்ந்த முஸ்லீம் போதகரும் தொழிலதிபருமான ஃபெத்துல்லா குலனின் ஆதரவாளர்கள் தான், ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு காரணம் என தாயீப் எர்டோகன் குற்றம் சாட்டினார். ஆதனைத் தொடர்ந்து ஆட்சி கவிழ்ப்பு முயற்சியில் தொடர்புடையதாகக் கருதப்படும் இராணுவ அதிகாரிகள், பொலிஸார் மற்றும் அரசாங்க ஊழியர்கள் என ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

# சுதந்திர தமிழீழம் மலர்ந்தே தீரும் பொது வாக்கெடுப்பு நடந்தே தீரும்!

## வைகோ நம்பிக்கை

சுதந்திரத் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு ஒரு நாள் நடந்தே தீரும். சுதந்திர தமிழீழம் மலர்ந்தே தீரும் என்று மறுமலர்ச்சிதிராவிட முன்னேற்றக்கழகப்பொதுச் செய லாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாளான நேற்று மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் வைகோ தமது இல்லத்தில் வீரவணக்கம் செலுத்தியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாள், தமிழீழத் தாயகத்தை மீட்பதற்காக, தாயக விடுதலைக்காகத் தங்கள் உயிர்களை ஈந்த மாவீரர்கள் நினைவைப் போற்றுகின்ற நாள்.

உலகம் இதுவரை கண்டும், கேட்டும் இராத மாபெரும் விடுதலைப் புரட்சியை நடத்திய தேசியத் தலைவர் பிரபாகரனின் ஆணையை ஏற்று, அவரைத் தங்கள் நெஞ்சில் உயிராகக் கருதுகின்ற மாவீரர்கள், வீராங்கனைகள், களத்தில் நின்று போராடி, தங்கள் உயிர்களை ஈந்தனர்.

1982 ஆம் ஆண்டு, லெப்டிணன்ட் கேர்னல் சங்கர் என்ற சத்தியநாதன், சிங்களப்படைகளின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு, மருத்துவத்துக்காகக் கடல்தாண்டி தமிழ்நாட்டுக்கு வந்தார்.

அப்போது இங்கே இருந்த தேசியத் தலைவர் பிரபாகரனினுடைய மடியில் தலை வைத்தவாறு, தாய் தந்தை உறவுகளைப் பற்றி எண்ணாமல், தம்பி, தம்பி என்று தலைவரைப் போற்றி உயிர் துறந்த நாள் இந்த நாள் ஆகும்.

இனி இந்த நாள் மாவீரர் நாளாகப் போற்றப்படும், அவர்களுடைய தியாகம் நினைவுகூரப்படும், அவர்கள் சிந்திய செங்குருதியின் மீது ஆணையிட்டு, நமது தாயகக் கனவுநிறைவேறுவதற்காக களத்தில் போராடுவோம் என, வன்னிக் காடுகளுக்கு உள்ளே, தேசியத்தலைவர் பிரபாகரன், 1989 நவம்பர் 2 ஆம் நாள் அறிவித்தார்.

அந்த ஆண்டின் தொடக்கத்தில்தான், பெப்ரவரியில், நான் அங்கே வன்னிக் காடுகளுக்குச் சென்று, தேசியத் தலைவருடனும், விடுதலைப் புலிகளுடனும் இருந்தேன்.

இன்று உலகம் முழுமையும் பல்வேறு நாடுகளில், ஈழச் சகோதரர்களும், சகோதரிகளும், மாவீரர் நாள் கடைப்பிடிக்கின்றார்கள்.

உலகம் இதுவரை கண்டும் கேட்டும் இராத போரை விடுதலைப்புலிகள் நடத்தினார்கள். ஓயாத அலைகள், அக்கினி சுவாலைகள், ஆனை இறவுப் போர்க்களங்களில் வெற்றி மேல் வெற்றி பெற்றார்கள்.

ஆனால், அதன்பிறகு, இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட ஏழு அணு ஆயுத வல்லரசுகள் சிங்களப் படைகளுக்கு ஆதரவாகக் களம் இறங்கின. தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள்.



அதன் விளைவாக, விடுதலைப் புலிகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. உயிர்க்கொடை ஈந்த மாவீரர்களின் உடல்களும், எலும்புகளும் அந்த மண்ணில்தான் கலந்து இருக்கின்றன.

அவர்கள் சிந்திய செங்குருதி வீண் போகாது. நான் பிரஸ்ஸல்சில் அறிவித்தமை போல் சுதந்திரத் தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு ஒரு நாள் நடந்தே தீரும். தமிழ் ஈழம் அமைந்தே தீரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# எதியோப்பியாவில் யுத்த பகுதியில் சிக்கிய இலங்கையர்களை அழைத்துவர நடவடிக்கை!

எதியோப்பியாவில் யுத்த பகுதிகளில் சிக்கியிருந்த 38 இலங்கையர்கள் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த 38 இலங்கையர்களும் ஐக்கிய நாடுகளின் உதவிகளுடன் மீட்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

எதியோப்பியாவின் வடக்கு பிராந்தியத்தில் மூன்று வாரங்களாக இடம்பெற்ற மோதலில் சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் மத்திய அரசின் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் டைக்ரேயன் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்பட்டது.

இதனை அடுத்து எதியோப்பிய பிரதமர் அபி அகமது பிராந்திய அரசுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடங்கியமையை அடுத்து நவம்பர் 4 முதல் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளி. பரந்தன் சந்தியில் விளக்கேற்றியவர் கைது!

தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூரும் மாவீரர் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பல பகுதிகளிலும் மாவீரர் தின நிகழ்வு நடத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சியில் தடைகளுக்கு மத்தியில் மக்கள் தமது வீடுகளில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இதன்போது பரந்தன் சந்தியில் விளக்கேற்றிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!



கரந்தெனிய பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திவ்யகஹாவெல பகுதியில் கடந்த வியாழக்கிழமை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொரோனா வைரஸ் பரவலின் தீவிரம் 600 கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு!

## வழங்க ஜனாதிபதி முடிவு

கொழும்பு, நவ. 28

கொரோனா வைரஸ் பரவலை கருத்திற்கொண்டு சிறைச்சாலை கைதிகள் சிலருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 600 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்வுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துூர உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் ஆபத்தான குற்றச் செயல்கள் தொடர்பில் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் எவருக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலன்நறுவை, கேகாலை கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்த குற்ற விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் இயக்குநர் ஷானி அபேசேகர கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு உள்ள திடீர் சுகவீனம் காரணமாக அவர் ஐ.டி.எச் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மஹர சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த ஷானி அபேசேகர கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அதன் பின்னர் அவர் வெலிக்கட சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளார்.

நோய் தொற்றின் பின்னர் ானி அபேசேகரவை கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்புமாறு



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு ஷானி அபேசேகர மாற்றம்!



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் மஹர சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், இவ்வாறு கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து வெலிகந்த கொவிட்சிகிச்சை மையத்துக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் ஷானி அபேசேகரவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவரை வெலிகந்தை சிறைக்கு மாற்ற வேண்டாம் எனவும், அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சையளிக்கு மாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வூட் பொலிஸ் பிரிவு லயன் குடியிருப்பில் தீ!

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிவ்வெளி பெக்டரி - லயன் குடியிருப்பொன்றில் இரவு ஏற்பட்ட தீயால் 12 குடியிருப்புகளளரிந்து நாசமாகியுள்ளன.

தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அயலவர்கள் முயற்சித்து வருகின்ற போதிலும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது குடியிருப்பாளர்களின் உடைமைகள் தீயில் எரிந்து நாசமாகிய போதிலும் மீதமுள்ள உடைமைகளை மீட்கும் முயற்சியில் குடியிருப்பாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2020 இல் வெளியிடப்பெற்றது.